முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2021 யூலை

## (103) பொருளியல்

(Economics)

2021-10-30
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*
  (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* **1.1** *தொடக்கம்* **1.10** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் நுண்பாகப் பொருளாதாரத்தின் ஓர் ஆக்கக்கூறு (component) எது?

(1) திரண்ட வெளியீடு (2) நுகர்வோர் அல்லது வீட்டுத்துறை
(3) பணவீக்கம் (4) வேலையின்மை மட்டம்

**1.2** தரப்பட்ட காலப்பகுதி ஒன்றில் பொருளொன்றின் மேலதிக அலகொன்றை நுகர்வதால் ஏற்படுகின்ற நபர் ஒருவரின் மேலதிக திருப்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) மொத்தப் பயன் (2) எல்லைக் கிரயம் (3) எல்லைப் பயன் (4) மொத்தக் கிரயம்

**1.3** தரப்பட்ட பொருளின் விலையில் ஏற்படும் வீதாசார (%) மாற்றத்தைவிட கேள்விக் கணியத்தில் ஏற்படும் வீதாசார மாற்றம் குறைவாக இருக்கும்போது, தரப்பட்ட பொருளின் கேள்வியானது,

(1) நெகிழ்ச்சியற்றதாகும். (2) நெகிழ்ச்சியானதாகும்.
(3) ஒற்றை நெகிழ்ச்சியானதாகும். (4) பூரண நெகிழ்ச்சியானதாகும்.

**1.4** பின்வருவனவற்றுள் திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை ஒன்றின் பண்பு (characteristic) **அல்லாதது** எது?

(1) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள், மத்திய திட்டமிடல் முறைமையொன்றை அடிப்படையாகக் கொண்டு தீர்க்கப்படுதல்.

(2) ஆதன உரிமையானது அரசாங்கத்தால் வைத்திருக்கப்படுதல்.

(3) நியாயமானளவு வருமானப் பகிர்வு காணப்படுதல்.

(4) நுகர்வோர் இறையாண்மை காணப்படுதல்.

**1.5** நிரம்பல் வளையியை இடப்பக்கமாக நகர்த்தும் ஒரு காரணி :

(1) தொழில்நுட்ப மேம்பாடு.

(2) உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற காரணிகளின் விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி.

(3) அரசாங்கத்தால் வழங்கப்படும் உற்பத்தி மானியங்கள்.

(4) பொருளின் விலை எதிர்காலத்தில் உயர்வடையும் என்ற உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்பு.

**1.6** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் அளவு ரீதியிலான கருவியாக (quantitative instrument) இருப்பது எது?

(1) ஒதுக்க வீதக் கொள்கை

(2) கடன்களுக்கான உயர்ந்தபட்ச முதிர்வுக் காலத்தை அமைத்தல்

(3) உத்தரவாதங்களுக்கான வரையறைகளை அமைத்தல்

(4) நயவிணக்கம்

**1.7** பின்வருவனவற்றுள் பணச் சந்தையின் (money market) ஓர் உப சந்தை **அல்லாதது** எது?

(1) திறைசேரி உண்டியல்களின் சந்தை

(2) வர்த்தகத் தாள்களின் சந்தை

(3) வங்கிக்கிடையிலான அழைப்பு பணச் சந்தை

(4) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்

**1.8** பின்வருவனவற்றுள் பணத்தின் தொழிற்பாடு **அல்லாதது** எது?

(1) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஓர் ஊடகம்

(2) பெறுமதியின் ஒரு களஞ்சியம்

(3) கணக்கின் ஓர் அலகு

(4) பிற்போடப்பட்ட கொடுப்பனவின் ஒரு நியமம்

**1.9** விரிந்த பண நிரம்பலின் தொகை, வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் 50% கால மற்றும் சேமிப்பு வைப்புகள், வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணய வங்கியியல் அலகுகளின் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் ஆகியன எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) குறுகிய பண நிரம்பல் (2) அடிப்படைப் பணம்

(3) திரட்டிய விரிந்த பண நிரம்பல் (4) மிக விரிந்த பண நிரம்பல்

**1.10** 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி :

(1) 2.4 %. (2) -3.6 %. (3) 1.3 %. (4) -1.8 %.

*இல.* **1.11** *மற்றும்* **1.12** *ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** தொழில்நுட்பம் …………….. *(மாறாதிருக்கிறது / மாற்றமடைகிறது)* என்பது உற்பத்திச் சாத்திய வளையியின் ஓர் எடுகோளாகும்.

**1.12** வினைத்திறனும் ஸ்திரத்தன்மையும் நிலைபேறான அபிவிருத்தியில் காணப்படும் …………….. *(பொருளாதார / சமூக)* அம்சங்களின் உப – ஆக்கக்கூறுகள் (sub-components) ஆகும்.

*கீழே* **1.13** *மற்றும்* **1.14** *இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.13** சிலருரிமை என்பது சந்தையில் உள்ள அதிக எண்ணிக்கையிலான கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் கொண்டுள்ள ஒரு சந்தைக் கட்டமைப்பாகும்.

**1.14** "பொருளாதாரத் தேய்வு (Economic Depreciation) என்பது நேரில் கிரயத்திற்கான ஓர் உதாரணம் ஆகும்.

**1.15** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.15** கேள்வியைத் தீர்மானிக்கின்ற இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.16** விலைக்கும் கேள்விக் கணியத்திற்கும் இடையிலுள்ள எதிர்மறைத் (நேர்மாறு) தொடர்புக்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.17** நிரம்பலின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.18** அளவுத்திட்ட விளைவின் (Returns to Scale) இரண்டு (02) கட்டங்களைக் (stages) குறிப்பிடுக.

**1.19** கணக்கீட்டு இலாபம் மற்றும் பொருளாதார இலாபம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** குறுங்கால ஓட்ட உற்பத்திச் செயன்முறை (Short-run Production Process) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) கலப்புப் பொருளாதார முறைமை ஒன்றின் மூன்று (03) பிரதான பண்புகளைப் (characteristics) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவ்வாறு சந்தைப் பொருளாதார முறைமையினால் தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தேவைகளுக்கும் (needs) விருப்பங்களுக்கும் (wants) இடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தந்து **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) **பொருள் A** தொடர்பான கேள்விச் சமன்பாடு (Qd) மற்றும் நிரம்பல் சமன்பாடு (Qs) என்பன கீழே தரப்பட்டுள்ளன:

$$Qd = 16{,}600 - 3P$$

$$Qs = -6{,}000 + 2P$$

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்ய வேண்டியது :**

சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) அரசாங்கமானது, ஒரு பண்டத்தின் சமநிலை விலையை விடக் குறைந்த விலையை அப்பண்டத்தின் உயர்ந்தபட்ச விலையாக விதிக்கும்போது ஏற்படக்கூடிய விளைவுகளை வரைபொன்றின் உதவியுடன் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) நிறை போட்டிச் சந்தையொன்றின் நான்கு (04) பண்புகளைப் **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(b) இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு பணவீக்கத்தால் ஏற்படக்கூடிய மூன்று (03) விளைவுகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) "ஒரு நாடு, விதிப்பனவுகள் வாயிலாக தனது இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகிறது".

ஒரு நாட்டினால் சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் வேறு இரண்டு (02) முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) **நாடு X** உம் **நாடு Y** உம் அரிசியையும் கோதுமையையும் உற்பத்தி செய்கின்றன. ஊழிய அலகு (unit of labour) ஒன்றினால் இரண்டு நாடுகளும் உற்பத்தி செய்த அரிசி மற்றும் கோதுமை அலகுகளைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| பொருள் / நாடு | அரிசி (கிலோகிராம்) | கோதுமை (கிலோகிராம்) |
|---|---|---|
| **X** | 8 | 2 |
| **Y** | 4 | 4 |

(i) ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் எந்த நாடு முழு நயத்தை (absolute advantage) கொண்டிருக்கிறது என்பதைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் (comparative advantage) கொண்டிருக்கிறது என்பதைக் **குறிப்பிடுக.**

*(ஆதரவான கணிப்பீடுகளைத் தருக.)* (04 புள்ளிகள்)

(c) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கின் இரண்டு (02) ஆக்கக்கூறுகளைக் (components) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) (a) அரசாங்கப் பாதீட்டிலுள்ள மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நேரில் வரி (Indirect Tax) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(B) (a) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா (மில்லியனில்)** |
|---|---|
| ஊழியர்களுக்கான இழப்பீடு | 7,500 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 13,600 |
| கலப்பு வருமானம் | 1,200 |
| உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரிகள் | 150 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரி | 2,000 |
| நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | (1,400) |

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

வருமான அணுகுமுறையைப் பயன்படுத்தி, பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) – அடிப்படை விலையில் (05 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(iii) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(b) தேசிய கணக்குகளைத் தயாரிப்பதன் நான்கு (04) முக்கியத்துவங்களைப் **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(C) அரசாங்கத்தின் "நிதிக் கொள்கை (Fiscal Policy)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |